விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 18 ஞாயிற்றுக்கிழமை (03.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 249

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# இராணுவத்தளபதி சரத்பொன்சேகா நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

## யாழ்.கள நிலைமைகள் குறித்து ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார். பாதுகாப்பு படைகளின் கூட்டுத் தளபதி எயர் சீப் மார்ஷல் டொனல்ட் பெரேரா வும் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு நிலை குறித்து ஆராய்வதற்காகவே இங்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. யாழ். வந்த அவர் நேற்று மாலையே கொழும்பு திரும்பினார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிக் கடலில் நடந்த ஏழு மணி நேர உக்கிர சமர்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கடலில் நேற்று முன்தினம் இரவு 8.15 மணிக்கு ஆரம்பமான மோதல் அதிகாலை 3.45 மணிவரை தொடர்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து இராணுவப்பேச்சாளர் பிரி கேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவிக்கையில் கடற்கரும்புலிகள் மற்றும் கடற்புலிகளின் 20 முதல் 25 படகுகள் காங்கேசன்துறையை நோக்கி வந்தன.

இப் படகுகளை கடற்படை தடுத்து நிறுத்தியது. இதில் கரும்புலிகளின் 5 படகுகளையும் ,ஆயுதம் தாங்கிய 7 வேறு படகுகளையும் கடற்படை அழித்தது என்றும் இந்த சமரில் தமது டோரா படகுகள் மூழ்கடிக்கப்பட வில்லை என்றும் இரண்டு டோரா படகுகள் சிறிய அளவில் சேதமடைந்தன என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இம் மோதலில் கடற்படையின் 2 டோரா அதிவேக தாக்குதல் படகுகள் மூழ்கடிக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு டோரா படகு சேதமடைந்த நிலையில் காங்கேசன்துறை துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்தனர் என தமிழ் நெற் இணையத் தளம் தெரிவித்துள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.சபையின் பிரதிநிதி இன்று இலங்கை வருகை

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி டெனிஸ் மக்னி மாறா இன்று இலங்கை வருகிறார். வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல் சம்பவங்களினால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தொடர்பாக ஆராய்வதற்காக அவர் இலங்கைக்கு வருவதாக அனர்த்த முகாமைத் துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். அவர் ஒருவார காலம் இலங்கையில் தங்கியிருக்கும் அக்காலப் பகுதியில் அனர்த்த முகாமைத் துவ அமைச்சர் உள்ளிட்டஅரச பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளார். (ச)

## இரண்டாவது சரக்குக் கப்பல் இன்று யாழ்.நோக்கி பயணம்!

(கொழும்பு)

குடாநாட்டிற்கு 3800 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை ஏற்றி இரண்டாவது சரக்குக் கப்பல் கொழும்புத் துறைமுகத்திலிருந்து இன்று அல்லது நாளை புறப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பலில் சுமார் ஆயிரம் மெற்றிக்தொன்னிற்கும் அதிகமான உணவுப் பொருட்கள் ஏற்கனவே ஏற்றப்பட்டுவிட்டதாகவும் மிகுதிப் பொருட்களை ஏற்றும் பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அநேகமாக இன்று அல்லது நாளை அது யாழ்.குடாநாட்டினை நோக்கிப் புறப்படும் என்றும் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். (04 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுப் பொறுப்பு இல்லாமலே அரசாங்கத்தை ஆதரிப்போம்

### முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை அரசாங்கம் நிறைவேற்றினால் அமைச்சுப் பொறுப்பு இல்லாமலேயே அரசாங்கத்தை ஆதரிப்போம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

முஸ்லிம் மக்களின் அபிலாசைகளில் குறிப்பாக அமைதி முயற்சிகள் தொடர்பிலானவற்றை அரசாங்கம் நிறைவேற்றுமானால் அரசாங்கத்தில் இணைவோம். அமைச்சுப் பொறுப்புக்கள் குறித்து நாங்கள் கவலைப்படவில்லை (04 ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தான் உறவுநிலை குறித்து இந்தியாவுக்கு இலங்கை விளக்கம்

(கொழும்பு)

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமான உறவு நிலை குறித்து இந்தியாவிடம் மகிந்தவின் ஆலோசகரும் அவரது சகோதரருமான பசில் ராஜபக்ஷ நேரில் விளக்கமளித்துள்ளார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமான உறவு நிலை நெருக்கமடைந்ததையடுத்து இந்தியா தனது விசனத்தை மறைமுகமாக வெளிப்படுத்திய நிலையில் இந்தியாவை சமாதானப்படுத்த பசில் ராஜபக்ஷவை புதுடில்லிக்கு மகிந்த ராஜபக்ஷ அனுப்பிவைத்துள்ளார்.

புதுடில்லிப்பயணம் மேற்கொண்டிருந்த பசில் ராஜபக்ஷ இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் உள்ளிட்ட அதிகாரிகளை சந்தித்துப்பேசியுள்ளார்.

தமிழீழ (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா மாமடு வீதியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இளைஞன் ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

வவுனியா நெளுக்குளம் பகுதியில் இராணுவக்காவலரண் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ள முயன்ற இளைஞன் மீது இராணுவத்தினர் பதில் தாக்குதல் மேற்கொண்டபோது அவர் உயிரிழந்ததாக தேசிய பாதுகாப்பு தொடர்பான மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## வீடுபுகுந்து சுட்டதில் தாயும் மகனும் பலி

### நெல்லியடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி குஞ்சர் கடைப்பகுதியில் ஆயுததாரிகள் வீடு புகுந்து மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் தாயும் மகனும் பலியாகினர். பெண் உட்பட இருவர் படுகாயம் அடைந்தனர்.

நேற்று முன்தினமிரவு 8.45 மணியவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் சேவாலங்கா நிறுவனத்தின் திட்ட அதிகாரி சத்தியமூர்த்தி செல்வரூபன் (வயது 25) அவரது தாயார் சத்தியமூர்த்தி தங்கரத்தினம் (வயது 56) ஆகிய (04 ஆம் பக்கம் பார்க்க)

## மினிபஸ் சாரதி சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் சேவையில் ஈடுபடும் மினிபஸ் சாரதி ஒருவர் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை புன்னாலைக்கட்டுவனிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து பயணிகளை இறக்கிவிட்டு பின்னர் தரிப்பிடத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது கஸ்தூரியார் வீதியில் வைத்துச் சுட்டப்பட்டுள்ளார்.

உரும்பிராயைச் சேர்ந்த ஒன்பது பிள்ளைகளின் தந்தையான பழனியாண்டி ரவீந்திரன் (வயது 40) என் (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### வடக்குக் கிழக்கில்

# இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை இரு இலட்சத்து 14 ஆயிரம் பேர்!

இலங்கையில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் இதுவரையில் இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 14 ஆயிரம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பான யு.என்.எச்.சி.ஆர். தெரிவித்துள்ளது. கடந்த ஏப்ரல் முதல் இதுவரை மொத்தம் இரண்டு இலட்சத்து 14 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர். இது முழுமையான தரவல்ல. இடம்பெயர்ந்துள்ளோர் சில பகுதிகளுக்கு எம்மால் செல்ல இயலவில்லை. பகல் நேரங்களில் சில குடும்பத்தினர் தங்கள் வீடுகளுக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். ஆனால் தற்போது அதுவும் நின்று விட்டது. மூதூர் நகரில் தொடரும் மோதல்களால் இடம்பெயர்ந்த மக்கள் குடியிருப்புக்களுக்கு திரும்புவது பாதிக்கப்பட்டுள்ளது என யு.என்.எச்.சி.ஆர்.வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–5)

# ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் நேற்று முன்தினம் 12 மணிக்குப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று முழுவதும் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

இவ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தபோது சில இடங்களில் பாரிய சுற்றி வளைப்புத் தேடுதலும் மேற்கொள்ளப்பட்டது.

கரணவாய் கிழக்கு, கரணவாய் மேற்கு, கலட்டி, ராசி கிராமம் ஆகிய இடங்களே சுற்றி வளைப்புத் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் அங்கிருந்த இளைஞர்கள் யுவதிகளின் அடையாள அட்டைகளைப் பெற்று சென்றனர். பின்னர் அவர்களை விக்னேஸ்வராக் கல்லூரி, சரஸ்வதி வித்தியாலயம், வேதாரணிய வித்தியாலயம் ஆகிய இடங்களுக்கு அழைத்து தலையாட்டி முன் நிறுத்திவிட்டு வீடுகளுக்குச் செல்ல அனுமதித்தனர்.

இச் சுற்றி வளைப்பின்போது எவரும் கைது செய்யப்படவில்லை எனக் கூறப்படுகிறது. (ஏ–5)

## கடத்தப்பட்ட பெண் விடுதலையானார்

கொழும்பில் கடத்தப்பட்ட மகாராஜா தொலைக்காட்சி நிறுவனப் பணியாளர் தவராஜா தவமணி நேற்று முன்தினம் இரவு விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக தி.மகேஸ்வரனின் மருமகளான தவராஜா தவமணியை வெள்ளை வான் குழுவினர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் கண்களைக் கட்டி கடத்தியதாகவும் அவர் முன்னர் பணி புரிந்த மத்திய வங்கி தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதன் பின்னர் அன்று இரவு 10.30 மணியளவில் வெள்ளவத்தையில் அவர் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச–5)

## யாழிலுள்ள வெளிநாட்டவரை அனுப்ப அடுத்த கட்ட நடவடிக்கை தேவை!

### இங்கிலாந்துத் தூதரகம் கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருக்கும் வெளிநாட்டவரை வெளியேற்றும் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கொழும்பிலுள்ள இங்கிலாந்து தூதரகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலிருக்கும் வெளிநாட்டவரை வெளியேற்றும் இரண்டாம் கட்ட நடவடிக்கையாக அரசாங்கத்துடனும் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுடனும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தொடர்பு கொண்டு திட்டமிட்டு வருகின்றது.

ஆகையால் அங்கிருந்து வெளியேற உள்ளவர்கள் இங்கிலாந்து தூதரகத்தில் விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டுகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மற்றும் யாழ்.அரச அதிபருடன் தொடர்புகளை வைத்திருக்குமாறு வெளிநாட்டவர்களுக்கு வேண்டுகோள் விடுகின்றோம் என இங்கிலாந்துத் தூதரகம் அறிவித்துள்ளது. அத்துடன் இங்கிலாந்துத் தூதரகத்தின் இணையத்தளத்தில் வெளியாகும் செய்திகளையும் அவதானிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச–5)

## யூனியன் கல்லூரி சமூகத்தினருக்கு

(யாழ்ப்பாணம்)

யூனியன் கல்லூரியின் ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை காலை 11 மணிக்கு சுன்னாகம் வினைல்ஸ் கல்வி நிலையத்தில் ஒன்று கூடுமாறு அதிபர் ஆர்.சண்முகேஸ்வரன் கேட்டுள்ளார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளதால் தற்போதைய சூழ்நிலை காரணமாக கல்விச் செயற்பாட்டை மேற்கொள்ளப் பாதுகாப்புப் பிரிவினரின் அனுமதி கிடைக்கவில்லை என அதிபர் தெரிவித்துள்ளார். (ச)

## போயா ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தி சாயி சேவா நிலையத்தின் போயா ஆன்மீக நிகழ்வுகள் எதிர்வரும் 7ஆம் திகதி 9மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வு 'ஆத்மீக சாதனைகள்' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக கணிதப் புள்ளி விபரவியற்றுறை தலைவர் கலாநிதி சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராசா விசேட சொற்பொழிவாற்றவுள்ளார். (ச)

# யாழில் ஏற்பட்ட அசாதாரண சூழலால் கல்வியைத் தொடர முடியாத நிலை

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண் சூழ்நிலை காரணமாக கற்றல் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாதுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிலவி வரும் தற்போதைய சூழலில் மாணவர்கள் கல்வியை தொடர முடியாத இக்கட்டான நிலையில் உள்ளனர்.

குடாநாட்டில் சகல பிரதேசங்களையும் சேர்ந்த மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் பயிலுகிறார்கள். இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் முற்றாக ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் வரை ஒன்றிணைந்த கல்விச் செயற்பாட்டை மேற்கொள்ள முடியாத நிலைஏற்பட்டுள்ளதாகவும் மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் பயிலும் வெளிமாவட்ட மாணவர்கள் அகபுற சூழல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமது பெற்றோரைச் சந்தித்த பின்னரே கற்றல் நடவடிக்கையைத் தொடர்வதென்ற உறுதியான முடிபில் உள்ளனர்.

அவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல ஏ–9வீதியை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் கைது செய்யப் பட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் பகீரதனை விடுதலை செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இத்தகைய கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம், பாதுகாப்புத் தரப்பு, விடுதலைப்புலிகள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் ஆக்கபூர்வமான நட்வடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ச)

## சடலம் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு கிரான்பாஸ் வேக்கர்சன் வீதியிலிருந்து நேற்றுக் காலை மனித சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

ஆற்றில் வீசப்பட்ட நிலையில் கரையொதுங்கிய இந்த உடலத்தின் முகப் பகுதி உறை ஒன்றினால் சுற்றப்பட்ட நிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச–7)

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் சர்வதேச மன்னிப்புச் சபை சந்திப்பு

இங்கிலாந்து சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் 4 ஆம் திகதி மூதூரில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை குறித்து இச்சந்திப்பில் விவாதிக்கப்பட்டது.

அத்துடன் இலங்கையில் அதிகரித்து வரும் மனித உரிமைகள் அவலங்கள் தொடர்பிலான தனது கவலையை மகிந்தவுடன் சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகள் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது. (ச)

## மானிப்பாயில் நால்வர் உட்பட ஐவர் ராணுவத்தினரால் கைது

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய்ப் பகுதியில் நேற்று நால்வர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

மானிப்பாயில் தையல் கடைநடத்தி வரும் நல்லையா ஜெகதீஸ்(வயது–30), மானிப்பாயில் பலசரக்கு வியாபாரம் செய்யும் அன்ரன் ஞானதாஸ் பிரதாப் (வயது–24), சுதுமலையைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சிவகுமரன் (வயது–43), சுதுமலையைச் சேர்ந்த கனகேந்திரன் கஜேந்திரன் (வயது–24) ஆகிய நால்வரும் மாலையில் இராணுவத்தினரால் கைது செய் யப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை கொக்குவில் வராகி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த சின்னையா சிறிதரன் (வயது –25) என்பவரும் நேற்றுக் கைது செய்யப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது. இவரது உறவினர் ஒருவரின் மோட்டார் சைக்கிளிலும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இவர்களுடன் மேலும் பத்துப் பேர்கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ–1)

# திருகோணமலையில் மோதல் பத்து இராணுவத்தினர் பலி

(திருகோணமலை)

திருமலை கிழக்கில் படையினரின் ஆக்கிரமிப்பு யுத்தம் விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

நேற்றுக் காலை தோப்பூர்ப் பகுதியிலிருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான பட்டியடி பகுதியை நோக்கி படையினர் படை நகர்வை மேற்கொண்டிருந்தனர்.

எறிகணை மற்றும் பல்குழல் தாக்குதல் யுத்த டாங்கிகள் மற்றும் துருப்புக் காவிகள் சகிதம் படையினர் முன்னேறிய போதும் விடுதலைப்புலிகளின் முன்னரங்க நிலைகளில் வைத்து விடுதலைப்புலிகள் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது படையினர் தரப்பில் பத்துப் பேர் கொல்லப்பட்டதோடு மேலும் 15 படையினர் படுகாயங்களுக்கு உள்ளாகியதாகவும் மேலும் இரு துருப்புக் காவிகள் கடும் சேதங்களுக்குள்ளாகியதாகவும் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் பதில் தாக்குதலில் படையினர்அனைத்துப் படை நகர்வுகளையும் இடை நடுவே விட்டு விட்டு தமது பழைய நிலைகளுக்கு திரும்பியுள்ளனர்.

இத் தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளதாக எழிலன் தெரிவித்துள்ளார். (ச)


## சிறுவிளம்பரம்

### ஆனந்தி திருமணசேவை

இந்து வேளாண்குலம் 1970இல் பிறந்த பகை பெற்ற 2 இல் செவ்வாய் உடைய பூரம் நட்சத்திரம், கிரகபாவ சங்கியை 70ஐக் கொண்ட 5' உயரம் உடைய கவர்ச்சிகரமான பொது நிறப் பெண்மணிக்கு வெளிநாடுகளிலும் உள்ளூரிலும் மணமகனைத் தேடுகின்றோம். நேரடியாகவும் அஞ்சல் மூலமும் தொடர்பு கொள்ளலாம். ஆனந்தி திருமண சேவை. (சோதிடர் V.A.சிவராசா) 56, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.எம்மிடம் சகல மத, ஜாதி மணமக்களின் திருமணத்திற்கு ஜாதகங்கள் உள்ளன. கை ரேகை, ஜாதகம், எண்ஜோதிட மூலம் உங்கள் எதிர்காலம் பற்றி அறியவும் ஜாதகக் குறிப்பு எழுதித் தர, விவாகப் பொருத்தம் பார்க்க, அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க தொடர்பு கொள்ளுங்கள்.


## தனியார் விமான நிறுவனத்தின் பணியாளர்கள் மூவர் கடத்தல்

கொழும்பில் தனியார் விமான நிறுவனத்தின் மூன்று பணியாளர்களை வெள்ளை வானில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

தனியார் விமான நிறுவனமான ஏரோ லங்கா ஏர்லைன் நிறுவனத்தின் நிதிப் பிரிவு இயக்குநரான லோகேந்திரராஜா கோமதி (வயது–36), ரட்மலானை வலகம்பாய மாவத்தையில் உள்ள அவரதுவீட்டில் இருந்து கடந்த ஓகஸ்ட் 22 ஆம் திகதி இரவு 10 மணியளவில் அடையாளம் தெரியாத குழுவினர் கடத்திச் சென்றுள்ளனர்.

மேலும் கோமதியின் வீட்டிலிருந்த கணனி மற்றும் ஆவணங்களையும் அக் குழுவினர் எடுத்துச்சென்றுள்ளனர்.

கோமதியைக் கடத்தியோர் சிங்கள மொழியில் உரையாடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அதேநாளில் ஏரோ லங்காப் பணியாளர்களான லால் பிறேமரட்ண (வயது–28)உள்ளிட்ட இருவர் பொறளையிலிருந்து மாலை 5 மணியளவில் கடத்திச் செல்லப்பட்டனர்.

இக் கடத்தல்தொடர்பாக மனிதஉரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றிற்கும் முறைப்பாட்டு மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் பொறுமையை புகழத்தான் செய்வார்கள். ஆனால் துன்பத்தை தாங்கிக் கொள்ளமாட்டார்கள்.

-அப்துல்-றஹீம்

வலம்புரி

## பொருட் தட்டுப்பாட்டை உடனடியாக நீக்கப்பட வேண்டும்

யாழ்.குடாநாட்டில் அனைத்துப் பொருட்களுக்கும் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் நிலவும் இப் பொருள் தட்டுப்பாட்டை உடனடியாக நிவர்த்தி செய்யத் தவறினால் பட்டினிச் சாவை மக்கள் எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகி விடும்.

இவ்விதம் மிக விரைவாக துரத்தி வரும் பட்டினிச் சாவைத் தவிர்ப்பதற்கு யாழ்.குடாநாட்டில் இயங்கும் சர்வதேச் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

அதேநேரம் அரசு இது விடயத்தில் அதீத கவனம் எடுப்பதும் அவசியமாகும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டு விட்டது என்ற கருத்தை நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகள் நிரூபித்துக் கொண்டாலும் யுத்தநிறுத்த உடன்படிக்கையைக் கண்காணிக்கும் குழு இயங்குவதனால் ஏ-9பாதையை திறப்பதில் இருதரப்பிற்கும் இடைஞ்சல் இருக்க முடியாது.

அதாவது படைத்தரப்பினரும் விடுதலைப்புலிகளும் சண்டையில் ஈடுபட்டாலும்ஏ-9 பாதையைத் திறப்பதற்கு அது தடையாக அமையாது என்பதை கண்காணிப்புக் குழுவின் இயங்குகை நிரூபித்து உள்ளது.

யாழ்.குடாநாட்டு மக்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்வதற்கு அடிப்படைக் காரணம் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம் பெறும் சண்டையல்ல.

மாறாக ஏ-9 பாதை மூடப்பட்டதே அதற்குக் காரணமாகும். ஏ-9பாதைக்கு மாற்றீடாக கடல் மார்க்கமாக யாழ்.குடாநாட்டிற்குப் பொருட்கள் எடுத்து வரும் நடைமுறை வெற்றி தரவில்லை என்றே கூற வேண்டும்.

ஐயாயிரம் மெற்றிக்தொன் உணவுப் பொருட்கள் யாழ்.குடாநாட்டிற்குத் தேவையென யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்திருந்த போதிலும்,

ஆயிரத்து ஐந்நூறு மெற்றித்தொன் உணவுப் பொருட்களே கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

எனவே கப்பலில் எடுத்துவரும் உணவுப் பொருட்கள் யாழ்.குடாநாட்டு மக்களின் உணவுத் தட்டுப்பாட்டிற்குப் பரிகாரம் தேடாது என்பதால் ஏ-9பாதை ஊடாக உணவுப் பொருட்களை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் எடுக்க வேண்டும்.

இல்லையேல் இருக்கின்ற சொற்பமான பொருட்களை பணக்கார வர்க்கம் நுகர்ந்து கொள்ள ஏழைகள் பட்டினிச் சாவை எதிர்கொள்ளும் பரிதாபம் முதற்கட்டமாக யாழ்ப்பாணத்தில் நடந்தேறும்.

# ஒரு வாரத்திற்குப் போதுமான எரிபொருட்கள் யாழில் உள்ளன

## பதுக்கல் நடவடிக்கையே தட்டுப்பாட்டுக்குக் காரணம்

### அமைச்சர் பௌசி தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் ஒரு வாரத்துக்குத் தேவையான எரிபொருட்கள் உள்ளன. எனினும் அவற்றின் விலைகளை அதிகரித்து விற்பதற்காக யாழ்ப்பாண எரிபொருள் விற்பனையாளர்கள் பதுக்கி வைத்திருப்பதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் பௌசி குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் எரிபொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை தொடர்பாக கேட்கப்பட்டபோதே அவர் இதனை தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை. ஒருமாத காலப் பகுதிக்கு போதுமான எரிபொருட்கள் சேமிப்பில் இருந்தன. எனினும் அங்கு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி மக்கள் எரிபொருட்களை அதிகளவில் கொள்வனவு செய்துள்ளனர். இதனால் அவை ஒரு பகுதியினருக்கு மட்டுமே கிடைத்துள்ளது.வறிய மக்கள் இதனால் பாதிப்படைந்துள்ளனர் என்றார் அவர்.

இதேவேளை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் இல்லாமல் போவதற்குச் சாத்தியமில்லை. ஆனால் விலையை அதிகரிப்பதற்கான பதுக்கல் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

இது குறித்துத் தாம் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதாகவும் கூறினார்.இது இவ்வாறிருக்க யாழ்ப்பாணத்திற்குத் தேவையான எரிபொருட்களை கப்பலில் அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அடுத்த இரு வாரத்திற்குள் அவை யாழ்ப்பாணத்தை வந்து சேரும் என்று அவர் கூறினார். (ச-5)

# என்னை கொல்வதற்கு முயற்சித்தது இந்தியாவின் 'றோ' அமைப்புத்தான்

## பாகிஸ்தான் தூதுவர் பகிரங்கக் குற்றஞ்சாட்டு

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் என்னைக் கொல்ல இந்தியாவின் புலனாய்வு அமைப்பான றோ தான் முயற்சித்தது என்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இச் சம்பவத்தில் தொடர்பில்லை என்றும் இலங்கைக்கான பாகிஸ்தானின் முன்னாள் தூதுவர் பசிர் வலி மொகமெட் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கைக்கான தூதுவர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் பாகிஸ்தான் திரும்பிய பசிர் வலி மொகமெட் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்திலிருந்து வெளியாகும் த போஸ்ட் இதழுக்கு அளித்த நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் என்னைக் கொல்ல தமிழீழ விடுதலைப் புலிகள் முயற்சிக்கவில்லை. ஒரு மூன்றாம் நாட்டில் எம்முடனான நிழல் போரை இந்தியாவின் றோ தொடங்கியுள்ளது. இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமான இருதரப்பு உறவுகள் அதிகரித்து வருவதுகுறித்து கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் கவலை கொண்டிருந்தார்.

என்னை இலங்கைக்குத் தூதுவராக நியமித்தது தொடக்கம் இந்தியா கடும் அதிருப்தியில்தான் இருந்தது. இந்தியாவின் றோ எனக்கு எதிரான தனது அசிங்கமான விளையாட்டுக்களை நடத்தி வருகிறது.

கொழும்புக்கு 2004 ஆம் ஆண்டு யூன் மாதம் வருவதற்கு முன்பாகவே இந்திய றோவின் முன்னாள் அதிகாரி பி.ராமன் என்னைப் பற்றி பல கட்டுரைகள் எழுதினார். என்னைத் தூதுவராக இலங்கை அரசாங்கம் ஏற்கக் கூடாது என்று இலங்கை ஊடகங்களில் கட்டுரைகள் எழுதி வேண்டுகோள் விடுத்தார்.

கொள்ளுப்பிட்டியில் குண்டு வெடிப்பு நடந்தபோது எனது மனைவி மற்றும் மகளும் வாகனத்தில் இருந்தோம். முதலில் ஒரு குண்டுவெடிப்பில் நான் சிக்கிக் கொண்டதாகக் கருதப்பட்டது. ஆனால் பின்னர் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் அது என்னை இலக்கு வைத்ததாக இருந்தது.

அரசாங்கமானது எனது பாதுகாப்பிற்காக ஏழு கொமாண்டோக்களை நியமித்திருந்தது. கொள்ளுப்பிட்டிக் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்த போது என்னுடன் முதலில் பேசியது இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தான் என்றார் பசிர் வலி மொகமெட். (ச-5)

# யாழில் மனித நேயப் பணிகளை அதிகரிக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முடிவு

யாழ்ப்பாணத்தில் தமது மனித நேயப் பணிகளை அதிகரிக்கவுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

வடக்குக் கிழக்கில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல்கள் அதிகரித்துள்ளதால் மனித நேய உதவிகளை அதிகரிக்கும் தேவை ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மோதல் காரணமாக கடந்த 6 வாரங்களாக வடக்குக் கிழக்கில் பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் தொடரும் மோதல்களால் நாட்டின் ஏனைய பிரதேசங்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதனால் இப் பிரதேசத்தில் மனித நேயப்பணிகளை அதிகரிக்கும் தேவை ஏற்பட்டுள்ளதாக அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து ஜெனீவா திரும்பியிருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆசியப் பசுபிக் பிராந்திய பிரதிநிதி ரெய்ட்டோ மெய்டர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வோய்ஸ் ஒவ் அமெரிக்கா என்ற ஊடகத்திற்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 40 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். யாழ்ப்பாணத்துக்கான தொடர்புகள் துண்டிக்கப்படும் முன்னர் இடம்பெயர்ந்தவர்கள் உட்பட ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு தேவையான மருந்துப் பொருட்கள் மற்றும் அடிப்படை வசதிகளை மேற்கொண்டு வந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.இதேவேளை இலங்கையில் நிவாரணப் பணியாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் பணிகள் இடைநிறுத்தப்படும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எச்சரிக்கை விடுத் துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் செஞ்சிலுவைச் சங்கம் தொடர்பில் உள்ளதாகக் கூறிய அவர் வன்முறைகளின் முற்றுகையில் சிக்கியுள்ள மக்களை வெளியேற்றவும் அகதிகளாகிவிட்ட மக்களுக்கான அவசர கால உதவிகளை மேற்கொள்ளவும் இருதரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச)

# மூதூர் படுகொலை குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

(கொழும்பு)

மூதூர் அரச சார்பற்ற பணியாளர்கள் 17பேர் படுகொலை மற்றும் அல்லைப்பிட்டி பங்குத் தந்தை காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணைகளை நடத்த மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட வேண்டும் என்று கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் துலிப்டி சிக்கெர அடிகளார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு;

மூதூரில் 17 அரச சார்பற்ற பணியாளர்க்ள் படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது இலங்கைளில் மட்டுமல்லாது சர்வதேச அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த பாரதூரமான நிலைமை குறித்த உத்தியோக பூர்வமான விளக்கங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

றோமன் கத்தோலிக்கத் தேவாலய பங்குத் தந்தை உள்ளிட்ட காணாமல் போனோர் மற்றும் கொல்லப்பட்டோர் குடும்பத்தினருக்கு என்ன நடந்தது என்பது தெரியப்படுத்த வேண்டும்.இது தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

இச் சம்பவங்களில் தொடர்புடைய குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாட்டின் வன்முறை நிலைமைகள் மிகவும் மோசமடைந்து வருகின்றன என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜிம்பிறவுண் அடிகளாரின் நிலை குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை அச்சம்

(கொழும்பு)

அல்லைப்பிட்டி பங்குத்தந்தை ஜிம்புற வுண் அடிகளார் மற்றும் அவரது உதவியா ளர் விமலதாஸ் ஆகிய இருவரின் பாதுகாப் புத்தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை அச்சம் வெளியிட்டுள்ளது.

இவர்கள் கடந்த 20 ஆம் திகதி தீவகத் தில் இருந்து யாழ்ப்பாணத்திற்குச் சென்ற வேளை காணாமல் போனதாக தெரிவிக்கப் பட்டது.

2005 ஆம் ஆண்டு 62 பேர் காணாமல் போனதாக மனித உரிமை ஆணைக்குழு வில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

182 தனிநபர்கள் பல்வேறு காரணங்க ளுக்காக காணாமல் போயுள்ளமை குறித்து மனித உரிமை ஆணைக்குழு விசாரணை களை மேற்கொண்டு வருவதாகவும் சர்வ தேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. (சு)

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் சொந்த மண்ணில் வாழும் உரிமை இல்லையா?

## முன்னாள் ஜனாதிபதி கேள்வி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்தவின் அரசாங்கத்தின் கீழ்,தான் பிறந்த மண்ணில் வாழும் உரிமை இல்லையா என முன்னாள் ஜனாதிபதி சந் திரிகா குமாரதுங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவுக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தனக்கு வழங்கிய கொமாண்டோ பாது காப்பு மற்றும் வாகனங்களைக் குறைப்பது தொடர்பாக பாதுகாப்புச் செயலாளருக்கு என்ன உரிமை இருக்கிறது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.2005 ஆம் ஆண் டில் நவம்பர் மாதம் அமைச்சரவை முடிபுக ளுக்கு அமைவாக பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் வாகனங்கள் வழங்கப்பட்டமை குறித்து பாதுகாப்புச்செயலாளர் அறிந்தி ருப்பதாகவும் அக் கடிதத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவி ஏற்ற தில் இருந்து தனக்குரிய பாதுகாப்பு குறைக் கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (சு)

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு 57 கோடி ரூபா பெறுமதியான மருந்து

## சுகாதார அமைச்சு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள வைத்தியசாலைகளுக்கு 57 கோடி ரூபா பெறுமதியான 285 மருந் துப் பொருட்களினை அனுப்பிவைக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரி வித்துள்ளார்.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி வைத் தியசாலைகளுக்கு தேவையான மருந்துப் பொருட்களே அனுப்பிவைக்கபட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோ சனையின் பேரில் இந்த மருந்துப் பொருட் கள் அனுப்பிவைக்கப்பட்டதாக சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட மா காண சுகாதார சேவைப்பணிப்பாளர்கள் விடுத்த கோரிக்கையின் பேரிலேயே சத்திர சிகிச்சைக்கு பயன்படுத்தும் மருந்துப் பொருட் களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (சு)

# கைக்குண்டுத் தாக்குதலின்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலி

(மட்டக்களப்பு)

நிந்தவூரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் குண்டுத் தாக்குதலில் பலியாகினர். உரையாடிக் கொண்டிருந்தபோது இனந் தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட கைக் குண்டுத் தாக்குதலிலேயே மூவரும் கொல் லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம் பெற்றுள்ளது. பலியான வர்களின் உடலங்கள் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள் ளது. (சு)

## வீடு புகுந்து சூட்டதில்...

இருவரும் உயிரிழந்தனர்.

செல்வரூபனின் மனைவி சோபனா (வயது 22) மற்றும் சத்தியமூர்த்தி கஜரூபன் (வயது 20) ஆகிய இருவரும் படுகாய மடைந் தனர். காயமடைந்த இருவரும் மந்திகை மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

நேற்று வடமராட்சியில் முழுநாளும் ஊர டங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டபோதும் பருத்தித்துறை நீதிவான் அரியநாயகத்தின் பணிப்பின்பேரில் காயமடைந்தவர்கள் மந் திகை மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (சு-133)

## வவுனியாவில்...

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் சடலத் தை வவுனியா வைத்தியசாலையில் ஒப்ப டைக்கு மாறு உத்தரவிட்டார். (சு)

## அமைச்சுப்...

என அதன் தேசிய அமைப் பாளர் கே. எம். பாய்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ரவூப் ஹக்கீமும் மகிந் தவின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷவும் தொடர்ந்து விவாதித்து வருகின்றனர்.

இருப்பினும் அரசாங்கத்தில் உள்ள இன வாத சக்திகள்தான் அமைதி முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படுத்துகின்றன. பேச்சுக்கள் மூலம் அமைதி உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான் எமது கொள்கை என்றார் அவர். (சு)

## பாகிஸ்தான் உறவு நிலை...

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் பாகிஸ்தான் விமானப்படை யைச் சேர்ந்தவர்கள் ஈடுபடவில்லை என்றும் இராணுவ மூலோபாயம் வாய்ந்த திருகோ ணமலைத் துறைமுகத்தை பாதுகாக்க தாக் குதல் நடத்தப்பட்டு வருவதாகவும் இந்தியத் தரப்பினருக்கு பசில் ராஜபக்ஷ விளக்கியுள் ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் சம் பூர் பிரதேசம் இருப்பதால் திருகோணமலை கடற்படைத்தளத்திற்கு ஆபத்து இருப்பதை வரை படங்களுடன் பசில் ராஜபக்ஷ விளக் கியதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின் றன.

மேலும் சம்பூர் பிரதேசமானது எந்த வகையில் மூலோபாயம் உள்ளது என்பதை யும் இந்தியாவிடம் பசில் ராஜபக்ஷ தெரிவித் துள்ளார். (சு)

## கிளிபஸ்...

பவரே சுட்டுக்கொல்லப்பட்ட வராவார்.

இச் சம்பவம் தொடர்பாக ஸ்தலத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா பிரேதபரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கு மாறு உத்தரவிட்டார். (சு-133)

## இரண்டாவது சரக்குக்...

வரவுள்ள இரண்டாவது சரக்குக் கப்ப லில் 2500 மெற்றிக் தொன் அரிசி,750 மெற்றிக் தொன் மா,250 மெற்றிக்தொன் பருப்பு மற்றும் 300 மெற்றிக்தொன் சீனி என்பன அனுப்பப்பட இருக்கிறது.

இவையனைத்தம் கொழும்புத் துறை முகத்தில் தற்போது நங்கூர மிட்டிருக்கும் இந்தக் கப்பலில் ஏற்றப்பட்டு விடும் அது இன்று பருத்தித்துறை துறைமுகத்தை நோக் கிப் புறப்படும். அது அங்கு சென்றடைய குறைந் தது 60 மணித்தியாலங்கள் தேவைப்படும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணை யாளர் நாயகம் எஸ்.பி.திவாரட்ண தெரிவித் துள்ளார்.

வட பகுதியின் அரச அதிபர்களோடு தான் நெருங்கிய தொடர்பில் இருப்பதாக கூறிய அவர் யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரை அங்கு உணவுத் தட்டுப்பாடு ஏதும் இப்போது இல்லையெனக்கூறியதுடன் கிளி நொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங் களிற்கான அத்தியாவசியப் பொருட்களை அந்தந்த மாவட்ட செயலாளர்களின் விடுக் கப்பட்ட வேண்டுதலின் அளவுகளிற்கேற்ப எடுத்துச் செல்ல தன்னால் அனுமதி வழங் கப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சும் அவற்றிற்கு வேண்டிய அனுமதிகளை வழங் கியிருப்பதாகவும் தெரிவித்தார். (சு)

## வடமராட்சிக் கடலில்...

கடற்படையைச் சேர்ந்த 30 பேர் காணா மல் போயுள்ளனர் சிறிலங்கா விமானப்படை விமானங்களும் உலங்குவானூர்திகளும் கடற்பிரதேசத்தில் பறந்து தேடுதல் நடவடிக் கையை மேற்கொண்டு வருகின்றன. கட லோரப் பகுதிகளில் நேற்று காலை மேலதிக இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இது குறித்து விடுதலைப்பு லிகளின் இராணுவப்பேச்சாளர் இளந்திரை யன் கருத்துத்தெரிவிக்கையில் 8.45 மணி யளவில் கடற்படையினருக்கும் கடற்புலிக ளுக்குமிடையில் ஆரம்பித்த கடற்சண்டை நேற்று அதிகாலை 3.45 மணிவரைக்கும் தொடர்ந்தது.தொண்டமனாறு தொடக்கம் மணற்காடு வரை இச் சண்டை நடைபெற் றது. எங்களுடைய கடற்பகுதியில் கடற்படை யினர் விரைவுப் படகுகளில் வந்து மீனவர்க ளுக்கும் கரையோரப் பகுதி மக்களுக்கும் துன்பங்களை ஏற்படுத்தியதால் நாம் அவர் களை விரட்டியடித்தோம்.

அத்தாக்குதலில் கடற்படையினரை தொண்டமனாறு வரை நகர்த்திவிட்டு போரா ளிகள் திரும்பினர். கடற்படையினர் தாக்கு தல் படகு ஒன்றும் இரண்டு விசைப்படகுக ளும் சேதமடைந்தன இத்தாக்குதலில் 5 கடற்புலிகள் உட்பட 8 பேர் வீரச்சாவடைந் ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (சு)

## இராணுவத்தளபதி...

பலாலியை வந்தடைந்த இராணுவத் தளபதி தலைமையிலான குழுவினரை யாழ். மாவட்டக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி வரவேற்றார்.

பின்னர் யாழ்.நகரம் உள்ளிட்ட முன்ன ரங்கப் பகுதிகளின் நிலைகுறித்து யாழ்.கட்ட ளைத்தளபதியிடம் இராணுவத்தளபதி கேட் டறிந்து கொண்டார்.

மிருசுவிலில் உள்ள 55 ஆவது படைப் பிரிவுக்குச் சென்று அக் குழுவின் களநிலை மைகள் குறித்து விரிவாக் கலந்துரையாடி யுள்ளார்.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண இராணுவ கட்டளைத்தளபதி,55 படையணித் தளபதி சரத் கருணாரத்தின உள்ளிட்டோர் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் பிரதேசப் படையணிக ளின் தளபதிகளையும் கட்டளை அதிகாரிக ளையும் இராணுவத்தளபதி சந்தித்துப் பேசி னார்.

சந்திப்புக்களின் பின்னர் அவர் நேற்றே கொழும்பு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப் பட்டது. யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள அசாதாரண சூழ்நிலையை அடுத்து இரா ணுவத்தளபதி யாழ்ப்பாணத்திற்கு வந்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சு-5)


ST.JOHN'S COLLEGE,JAFFNA
CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
ADMISSION -2007 FOR GRADE 1,GRADE 4 AND GRADE 6

தரம் 1, தரம் 4, தரம் 6றக்கான அனுமதி -2007

1. அ) விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2006 முதல் 15.09.2006 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ) எக்காரணம் கொண்டும் 15.09.2006 க்குப் பின்னர் விண்ணப்பப் படிவங் கள் விநியோகிக்கப்படமாட்டா.
   இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
   ஈ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20.09.2006 புதன்கிழமை. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
2. பிழையாக நிரப்பப்பட்டவையும்,பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண் ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
3. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
4 விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
5 ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 500.00
6 வயதெல்லைகள்
   அ) தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2001 க்கும் 31.01.2002க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ) தரம் 6 விண்ணப்பதாரி 01.02.1996 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
   இ) தரம் 4 விண்ணப்பதாரி 01.02.1998 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
7 தரம் 4, 6 றக்கான பிரவேசப்பரீட்சை 14.10.2006, சனிக்கிழமை காலை 9 .00 மணிக்கு ஆரம்பமாகும்.

*குறிப்பு:* i. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் நிதியம் தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகின் றது.

ii. தரம் 12 (A/L 2009 Batch)றகு அனுமதிக்கான விண்ணப் பப்படிவங்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். 01.02.1990 இல் அல்லது அதற்குப்பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

அதிபர்கள்

(438)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org